தினமலர் 27.03.2025

# சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரம்

## அரசு ஆஸ்பத்திரிக்கு காகித ஆலை வழங்கல்




வேலாயுதம்பாளையம் அரசு ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவன பொது மேலாளர் கலைச்செல்வன் திறந்து வைத்தார். அருகில் மனிதவளத்துறை முதன்மை மேலாளர் சிவக்குமார், வேலாயுதம்பாளையம் அரசு ஆஸ்பத்திரி மருத்துவ அலுவலர் நிர்மலா ஆகியோர்.

**வேலாயுதம்பாளையம், மார்ச் 27–**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ஆலை தனது சமுதாய நலப்பணி திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஊராட்சி பகுதிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள், தளவாட பொருட்கள் என்று பல்வேறு உதவிகளை செய்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக வேலாயுதம்பாளையம், அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக வரும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக ரூ.95 ஆயிரம் மதிப்பில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரத்தை அமைத்துள்ளது.

அதனை தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவன பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் திறந்து வைத்தார். முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார், வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் நிர்மலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாலை மலர் 26.03.2025




வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனையில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை சார்பில் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை அதன் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் திறந்து வைத்தார். அருகில்முதன்மை மேலாளர் (மனிதவளம் ) சிவக்குமார், வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் நிர்மலா உட்பட பலர் உள்ளனர்.

### புகளூர் காகித ஆலை நிறுவனம் சார்பில்

# வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் எந்திரம் வழங்கல்

வேலாயுதம்பாளையம், மார்ச் 26—

கரூர் மாவட்டம் புகளூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தனது சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி. வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுரை ஆகிய ஊராட்சி பகுதிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள், தளவாட பொருட்கள் என பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, வேலாயுதம்பாளையம், அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூ.95 ஆயிரம் மதிப்பில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரத்தை அமைத்துள்ளது. அதை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் திறந்து வைத்தார். உடன் முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார். வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் நிர்மலா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி (26.03.2025)




தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை சார்பில்

# அரசு மருத்துவமனையில் குடிநீர் சுத்திகரிப்பு எந்திரம் திறப்பு

நொய்யல், மார்ச்.26-

கரூர் மாவட்டம் புகழூர் காகிதபுரம் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தனது சமுதாய நல்ப்பணித் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நன்செய்புகழூர், திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள், தளவாட பொருட்கள் என பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, வேலாயுதம்பாளையம், அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூ.95 ஆயிரத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் எந்திரத்தை அமைத்துள்ளது. அதை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் திறந்து வைத்தார். அப்போது முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார், வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் நிர்மலா உள்பட பலர் உடனிருந்தனர்.

தினமணி (26.03.2025)

# வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு டிஎன்பிஎல் சார்பில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்




வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை தொடங்கி வைத்தார் டிஎன்பிஎல் ஆலையின் பொது மேலாளர் (மனிதவ்ளம்) கே.கலைச்செல்வன். உடன் ஆலையின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ். சிவக்குமார், மருத்துவமனையின் மருத்துவ அலுவலர் மருத்துவர் நிர்மலா உள்ளிட்டோர்.

**கரூர், மார்ச் 25:** புகழூர் டிஎன்பிஎல் ஆலை சார்பில் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் சார்பில் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக ரூ.95 ஆயிரம் மதிப்பில் சுத்திகரிக்கப்பட்ட (ஆர்ஓ ) குடிநீர் வழங்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை மருத்துவமனையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு டிஎன்பிஎல் ஆலையின் பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன், ஆலையின் முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே.எஸ். சிவக்குமார் ஆகியோர் தலைமை வகித்து, குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் மருத்துவமனையின் மருத்துவ அலுவலர் மருத்துவர் நிர்மலா மற்றும் மருத்துவ அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**தினகரன் (26.03.2025)**

கரூர் தமிழ்நாடு காகித ஆலை நிறுவனம் சார்பில்

# ரூ.1 லட்சத்தில் அரசு மருத்துவமனைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி

வேலாயுதம்பாளையம், மார்ச் 26: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித்திட்டத்தின் சார்பில் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுரை ஆகிய ஊராட்சி பகுதிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்திட பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு மருத்துவ உபகரணங்கள், தளவாட பொருட்கள் என பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, வேலாயுதம்பாளையம், அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில் சுத்திகரிக்கப்பட்ட (RO Water) குடிநீர் வசதி அமைத்து தரப்பட்டது.



காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே. கலைச்செல்வன், முதன்மை மேலாளர் (மனிதவளம்) கே எஸ் சிவக்குமார், வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை அலுவலர்கள்.

வேலாயுதம்பாளையம், அரசு மருத்துவமனையில் உள்ள புறநோயாளிகள் பகுதி மற்றும் அவசர சிகிச்சை பகுதியில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக சுத்திகரிக்கப்பட்ட (RO Water) குடிநீர் வசதி செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே.கலைச்செல்வன் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரத்தை வழங்கி தொடங்கி வைத்தார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் முதன்மை மேலாளர் (மனிதவளம்) கேஎஸ் சிவக்குமார். வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் மருத்துவர். நிர்மலா மற்றும் மருத்துவ அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.